In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.129/2025

Deposition of P.W.6

| | |
|---|---|
| Name | **திரு.செல்வரத்தினம்** |
| Father's Name/Husband's Name | **திரு.** |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 16th day of September 2025.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை :**

நான் தூத்துக்குடியில் எஸ்.எஸ்.பிள்ளை மார்க்கெட் பக்கத்தில் வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் அருகில் வசித்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 14.12.2024 ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் ஆய்வாளர் சம்பவ இடமான செல்லம்மாள் என்பவரின் வீட்டை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அந்த வகைக்கு சாட்சியாக நானும், சாட்சி கார்த்திக்ராஜா என்பவரும் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**. மேலும் அதேதினம் 5 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்து தலையணை ஒன்றையும், போர்வை ஒன்றையும், பிளாஸ்டிக் விசிறி ஒன்றையும், கம்மல் திருகு ஒன்றையும்,டிவி ரிமோட் ஒன்றையும் கைப்பற்றினார்கள். அந்த வகைக்கு நானும், சாட்சி கார்த்திக்ராஜா என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அத்தாட்சி **அ.சா.ஆ.5.** ஆரஞ்சு, பச்சை, பிரவுன், வெள்ளை, மஞ்சள் கலர் டிசைன்போட்ட போர்வை **சா.பொ.3.** டிவி ரிமோட் **சா.பொ.4.** பிளாஸ்டிக்விசிறி **சா.பொ.5.**

(கம்மல் சுரை மற்றும் தலையணை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

இறந்துபோன செல்லம்மாள் எனக்கு துாரத்து பாட்டி உறவு முறை. அவரது மகன்கள் பார்த்திபன், பாரதிராஜா, பாஸ்கர் ஆகியோரை சிறு வயது முதலே தெரியும் என்றால்சரிதான். போலீசார் அங்கு வந்து விசாரிக்கும்போது மேற்படி மூவரும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான்.செல்லம்மாள் படுக்கை அறை கட்டிலில் இறந்துகிடந்தார் என்றால் சரிதான். அன்றைய தினம் மோப்பநாய், கைரேகை நிபுணர் வந்திருந்ததால் வீட்டிற்குள் யாரையும் விடாமல் இருந்தார்கள் என்றால் சரிதான். என் முன்னிலையில் போலீசார் நான் சொன்னதுபோன்ற பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1 க்கு நெருங்கிய உறவினர் என்பதால் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/—எம்.பி.முருகன்,<br>
அமர்வு நீதிபதி,<br>
மகளிர் நீதிமன்றம்,<br>
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.